1982 ஏப்ரல் 2]

(முற்பகல் 10.00)

திரு. செ. செம்மலை: இதுபோன்ற காற்றாலைகளைப் பயன்படுத்தி யு.பி. போன்ற மாநிலங்களில் வெற்றிகரமாக நடைபெறுவதாகச் சொல்கிறார்கள். யு.பி. அரசு இதுபோன்ற காற்றாலை தயாரிக்கிற தொழிற்கூடங்களுக்கு நிதி உதவி அளிப்பதாகச் சொல்கிறார்கள். திரு. சின்னராசு அவர்கள் சொன்னது போல் தமிழ்நாட்டிலும் இதுபோன்ற கழகத்தை அமைக்க வாய்ப்பு இருக்குமானால் அரசு அப்படிப்பட்ட திட்டத்தை நிறைவேற்ற உதவி செய்யுமா? இதற்கான உதவியைச் செய்ய மத்திய அரசிடம் மாநில அரசு உதவி கேட்டுப்பெறுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மத்திய அரசின் உதவியோடு இத்திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்றுதான் மாநில அரசு சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. மத்திய அரசும் இப்படிப்பட்ட திட்டத்தை ஊக்குவிக்கவேண்டும் என்றுதான் அவர்களும் நம் ஆய்வறிக்கைகளை கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல் கடற்கரைப்பகுதிகளில் இந்தமாதிரியான திட்டத்தை நிறைவேற்ற நிரம்ப வாய்ப்பிருக்கிறது. தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 900 கிலோ மீட்டர் தூரத்திற்கு கடல் பரப்பு பகுதி உள்ளதாக கணக்கு எடுத்து வைத்திருக்கிறோம். அதையெல்லாம் மனதில் கொண்டு இதைச் செய்யமுடியும். யு.பி.யில் தனியார் நிறுவனங்கள் ஆண்டுக்கு 100 முதல் 200 வரை காற்றாலை உற்பத்தி செய்யும் திறன் பெற்றிருக்கிறது. அந்த அரசு உதவி செய்வதாக குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன. அவைகளையும் இப்போது ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம்.

Amount Received Under the Investment Subsidy Scheme.

Q. No. 73[illegible] THIRU R. UMANATH will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the total amount this Government has received from the Central Government during 1978-1979, 1979-1980 and 1980-1981 under Investment Subsidy Scheme and

(b) the total number of Industries benefited by the scheme

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:

ஆண்டு.		(ரூ. இலட்சத்தில்.)
1. 1978–79	..	220.63
2. 1979–80	..	165.57
3. 1980–81	..	425.35
		820.55

ஆண்டு		நிறுவனங்களின் எண்ணிக்கை.
31.3.1978 வரை	..	903
1978–79	..	227
1979–80	..	458
1980–81	..	706
		2,294

திரு. ரா. உமாநாத்: கிடைத்த தொகை பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள், நான் கேட்க விரும்புவது, ஒவ்வொரு ஆண்டும் நம் அரசு கேட்ட தொகை என்ன? அவர்கள் ஒதுக்கிய தொகை என்ன? கடைசியில் கிடைத்த தொகை என்ன? மொத்தமாகக் கேட்டீர்களா? அல்லது குறிப்பிட்ட ப்ளான் ஸ்கீம்களுக்கு கேட்டீர்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் சொன்னேன். இருந்தாலும் இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற கேள்விக்குச் சொல்கிறேன். பொதுவாக சாப்பிடல் சப்சிடி என்பது பின்தங்கிய பகுதிகளில் தொழில் துவங்கும்போது அந்தத் தொழில் முதலீட்டில் 15% என்ற அளவிற்கு மத்திய அரசு மானியமாகக் கொடுக்கிறது. அதனுடைய உச்சளவு பணம், 15 இலட்சம் வரை இருக்கும். கண்ஸ்ட்ரக்ஷன் துவங்கிய அளவில் அந்த 15 இலட்சம் ரூபாயில் 8% அந்த மானியத்தை முதலில் கொடுக்கிறார்கள். பிற்பாடு ப்ரொடக்ஷன் ஆரம்பித்த பிறகு மிச்சம் 5% தொகையை மானியமாகக் கொடுக்கிறார்கள். லைசென்ஸ் பெற்று பின்தங்கிய பகுதிகளில் துவங்கப்படுகிற அனைத்துத் தொழில்களுக்கும் நாம் அப்படி பரிந்துரை செய்கிறோம். நாம் பரிந்துரை செய்கிற அனைத்துத் தொழில்களுக்கும் கொடுக்கிறார்கள். அவர்கள், பணம் ஸிப்காட் மூலம் கொடுக்கிறார்கள். கொடுத்துவிட்டு மைய அரசுக்கு அனுப்பி ரீஇம்பர்ஸ்மெண்ட் கேட்கிறார்கள். 31–12–1981 வரை மைய அரசிடமிருந்து இத்திட்டத்தின் கீழ் திருப்பியளிக்கப்பட வேண்டிய நிலுவை தொகை ரூ. 123.37 இலட்சமாகும். தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. ரா. உமாநாத்: 12 கோடி ரூபாய் பாக்கியிருக்கிறது என்று சொல்கிறார்கள். அது ஒரு கணிசமான தொகையாகும். அந்த 12 கோடி ரூபாயைப் பெறுவதற்கு முயற்சிகள், வெறும் கடிதப்போக்குவரத்தோடு நிறுத்துகிறீர்களா? அல்லது நேரடியாக டெல்லி சென்றபோது ஏதாவது பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறீர்களா? அந்தப் பேச்சுவார்த்தையில் மத்திய அரசு சொன்ன பதில் என்ன? நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடிதங்கள் மூலமாக வலியுறுத்துகிறோம். அதிலே நேரடியாக ஈடுபட்டிருக்கின்ற சிப்காட் நிறுவனம், கொடுக்கின்ற மானியத்தை மைய அரசிடமிருந்து பெற்றுக் கொடுக்கிறது. அந்த நிறுவனத்தைச் சார்ந்த உயர்மட்ட அதிகாரிகள், டெல்லிக்குப்போய் அங்கே சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு பேசுகிறார்கள். நானும், டெல்லிக்குச் செல்லுகிற

போது, மைய அமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன். மீண்டும் சட்டமன்றக் கூட்டம் முடிந்தபிறகு, டெல்லிக்குப் போகிற போது, இதுபற்றி வலியுறுத்துகிறேன். அதிலே வேண்டுமென்றே அவர்கள் காலதாமதம் செய்வதாக நான் நினைக்கவில்லை. அவர்களுக்குள்ள நிதி ஆதாரத்தை வைத்துக்கொண்டு, அவர்கள் பரவலாகப் பார்க்கிறபோது, மொத்த ஒதுக்கீட்டில் ஓரளவுக்கு ஒரு ரேஷியோவை வைத்துக் கொடுக்கிறார்கள். இருந்தாலும்கூட நம்முடைய பங்கைப் பெற வேண்டியது, நம்முடைய கடமை யாகும். அதைத் தொடர்ந்து வலியுறுத்துவோம்; அதைப் பெற முயற்சிப்போம்.

டயர் உற்பத்திசெய்யும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

(*வினா எண். 733. திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:—

(அ) தமிழக அரசின் வனஇலாகாவின் பொறுப்பில் இயங்கி வரும் ரப்பர் தோட்டங்களிலிருந்து கிடைக்கும் ரப்பரை உப யோகப்படுத்தி, டயர் உற்பத்தி செய்யும் பெருந்தொழிற்சாலை அமைப்பது சம்பந்தமாக அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத் திருக்கிறதா?

(ஆ) ஆம் எனில் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ஆம்.

(ஆ) திரு. என். ஏ. ஆர். நாகராஜன் அவர்களை தொழில் முனைவராகக் கொண்டு கூட்டுத் துறையில் டயர் உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்று டிட்கோவிடம் இருந்தது. இந்தத் திட்டம் "தமிழ் நாடு இரப்பர் லிமிடெட்" என்ற பெயரில் இயங்குவதாக இருந்தது. தனியார் தொழில் முனைவர் அவருடைய பங்கு மூலதனத்தைக் கொண்டு வர முடியாததால் இத்திட்டம் மேற்கொண்டு அமுல்படுத்த முடியாத நிலை ஏற் பட்டது. இந்த நிறுவனத்தை கலைத்து விடுவதற்காக உயர்நீதி மன்றத்தில் கலைப்பதற்கான மனு (winding up petition) தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உயர்நீதி மன்றத்தின் முடிவான தீர்ப்பு இன்னும் சில மாதத்திற்குள் அளிக்கப்படும் என்று எதிர்பார்ப்ப தாக டிட்கோ நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, டிட்கோ இதுசம்பந்தமாக ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்து வதற்கு முயற்சித்த நேரத்திலே, போக்குவரத்துக் கழகங்கள் அவர்களுக்குத் தேவையான டயர்களை தற்போது அவர் களிடத்தில் வாங்காவிட்டாலும், டிட்கோவிடம் வாங்கலாம் என்ற உறுதி கொடுக்கப்பட வேண்டுமென்று அவர்கள் கேட்ட தாகவும், போக்குவரத்துக் கழகங்கள் அப்படி உறுதிகொடுக்க இயலாது என்று கூறியதன் காரணமாக, அந்த ஸ்கீமை அவர்கள் கைவிட வேண்டி வந்ததாகவும் கேள்விப்படுகிறேன். அது உண்மையா? அப்படியென்றால், போக்குவரத்துக் கழகங்கள் அதற்கான உறுதி கொடுக்கக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்கப்படுமா?